**தலைப்பு 244 - வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு - 244 வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தக மற்றும் முதலீட:டு கொள்கை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 (அ) நிதி ஏற்பாட்டினை அதிகரித்துக் கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 04 செலவு விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டு அளவு போதியதல்லாததனால ரூபா 4,537,200 மொத்த தொகை நி.பி 66 மற்றும் குறைநிரப்பு நிதி ஏற்பாட்டின் மூலம் ஏற்பாடு அதிகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | நிதி எற்பாட்டினை அதிகரித்துக் கொள்ளலானது தேசிய பாதீட்டு திணைக்களத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் வருடாந்த செலவு மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

### (ஆ) நிதி ஏற்பாட்டினை மாற்றிக்கொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 02 செலவு விடயங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் சேமிப்புக்களின் மொத்தம் ரூபா 1,861,210 தொகை | 1001 - சம்பளங்களும் கூலிகளும் 1506 - அரசாங்க ஊழயிர்களுக்கான இடர் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் செலவு |

| | | |
|---|---|---|
| நி.பி 66 இன் கீழ் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | கடன் வட்டி ஆகிய செலவு விடயங்களின் கீழான நிதி ஏற்பாட்டின் சேமிப்பு நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் ஏனைய போதியதல்லாத செலவு விடயங்களுக்காக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### 3.1.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) South Asia Free Trade Agreement (SAFTA)** | | |
| 08 சார்க் வலய நாடுகளின் பங்குபற்றலுடன் தோற்றுவிக்கப்பட்டுள்ள தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்காக (சப்தா/SAFTA) இலங்கை 2005 ஆம் ஆண்டின் போது கையொப்பமிட்டிருந்தது. இந்த வர்த்தக உடன்படிக்கையில் வர்த்தகத்தை தளத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் இறுதித் தொகுதியின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள 50 சுங்க குறியீடுகளுக்காக (08-குறியீட்டினைக் கொண்ட) அமுல்ப்படுத்தப்படுகின்ற சுங்க வரியைக் குறைத்தல் 7.5 சதவீதம் மற்றும் 6 சதவீதம் அளவானவற்றினை 2018 திசெம்பர் மாதமளவில் 5 சதவீதம் வரை குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் அது 2024 யூலை 23 ஆந் | முன்னுரிமை தீர்வை விகிதத்தினை 5% எல்லை வரை குறைப்பதற்காக MF/TIP/09/CM/2014/188 ஆம் இலக்க 2019-06-11 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளை அமுல்ப்படுத்துவதற்காக அமைச்சரவையினால் இதுவரை தீர்மானம் எடுக்கப்பட்டிருக்காததுடன் இந்த உடன்படிக்கைக்குரிய கலந்துரையாடல் அதன் அங்கத்துவ நாடுகளின் பங்குபற்றலுடன் நடைபெற்றிருக்காததனால் இந்த நடவடிக்கை தற்பொழுது தற்காலிகமாக | நாட்டிற்குச் சாதகமான உடன்படிக்கைக்காக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிறுத்தப்பட்டுள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். | |
| **(ஆ)** | **பங்களாதேசிற்கும் - இலங்கைக்குமிடையேயான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (BS-PTA)** | | |
| | இலங்கைக்கும் பங்களாதேசிற்குமிடையே முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையினை மேற்கொள்வது சம்பந்தமான கலந்துரையாடலினை ஆரம்பிப்பதற்காக 2021 யூன் 14 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அச்செயற்பாடு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கும் பங்களாதேசிற்குமிடையே வர்த்தகத்திலிருந்து சிறந்த வர்த்தக மீதியும் உயர்ந்த இறக்குமதி உள்ளடக்க மீதியும் இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தின் மூலம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க பங்களாதேசிற்கும் இலங்கைக்குமிடையே முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையில் (BS-PTA) கையொப்பமிடுவதற்குரிய வேலைத்திட்டத் (Work Plan) திற்காக இணக்கப்பாட்டிற்கு வந்து இரண்டு நாடுகளுக்குமிடையே உடன்படிக்கையில் கையொப்பமிடுதல் 2022 சனவரி மாதத்திற்கு விண்ணப்பித்திருந்தும் அது 2024 யூலை 23 ஆந் திகதி வரை கையொப்பமிட்டிருக்கவில்லை. | இந்த உடன்படிக்கை தொடர்பான கலந்துரையாடல் இன்னும் இடம்பெற்றுவருவதுடன் இரண்டு நாடுகளுக்குமிடையேயான இணக்கப்பாட்டிற்கு இணங்க நிர்ணயிக்கப்படும். | வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்திற்கு இணங்க தாமதமின்றி உடன்படிக்கை செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை**

| | | |
|---|---|---|
| சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான இணக்கப்பாட்டிற்கு வருவது சம்பந்தமான கலந்துரையாடல் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2017 ஆம் ஆண்டுவரை நடைபெற்றது. பின்னர் மீண்டும் 2022 ஆம் ஆண்டின் போது கலந்துரையாடலினை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கலந்துரையாடல் மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | இந்த உத்தேச உடன்படிக்கை சீனாவிற்கும் இலங்கைக்குமிடையெ இருதரப்பு உடன்படிக்கையாக இருந்ததுடன் தற்பொழுது இதன் 07 ஆவது கலந்துரையாடல் சுற்று இரண்டு நாடுகளுக்குமிடையேயான இணக்கப்பாட்டின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடாத்துவதற்கு சர்வதேச வர்த்தக அலுவலகத்தின் (ITO) மூலம் தேவையான நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது என தயவாக தெரிவிக்கிறென். | நாட்டின் தேவைப்பாட்டிற்கு இணங்க தாமதமின்றி உடன்படிக்கை செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 பெறுகைகள்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| அரசாங்க நிறுவனங்களுக்கு அரசாங்க இலத்திரனியல் பெறுகை முறைமையை அறிமுகப்படுத்துவது தொடர்பாக 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 05/2018 ஆம் இலக்க மற்றும் 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சந்தை விலை நிர்ணய முறைமைக்காக இலத்தீரனியல் பெறுகை முறைமையினைப் பயன்படுத்துதல் அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திணைக்களத்தினால் மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது 2023 ஆம் ஆண்டின் போது | சந்தை விலை நிர்ணய முறைமையின் கீழ் பொருட்களை பெறுகை செய்யும் போது அரசாங்க இலத்திரனியல் பெறுகை முறைமையைப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என மேலும் தெரிவிக்கிறேன். | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலத்திரனியல் பெறுகை முறைமை பயன்படுத்தப்படாது 14 சந்தர்ப்பங்களின் போது மொத்தமாக ரூபா 941,291 தொகையான பெறுகை விடயங்கள் சந்தை விலை நிர்ணய முறைமையில் வழங்கப்பட்டிருந்தன. | | |

## 4 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரித்த ஆளணியும் உள்ளபடியான ஆளணியும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரித்த ஆளணியினர் 64 ஆக இருந்ததுடன் இரண்டாம் மட்டத்திலுள்ள 03 பதவிகளின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு 2024 யூன் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடமான பதவிகளை மிக அண்மையில் நிரப்பவதற்காக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். | முறைப்படியாக நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஆளணியல் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |